**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 58/2023**

**வாக்குமூலம்: பி.வா.சா.1 – பார்த்தசாரதி**

**23.03.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

வாதி 1 லக்க சொத்தை கடந்த 12.03.2020 ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வாதி 1 ஆம் லக்க சொத்தை கிரையம் பெற்ற போது மேற்படி இடத்தில் ஓட்டு வீடு இருந்தது. தற்போது ஓட்டு வீட்டை இடித்துள்ளார்கள். மேற்படி இடத்தில் புதிதாக வீடு கட்டி வருகிறார்களா என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. தற்போது 1ம் லக்க சொத்து காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். 1 ஆம் லக்க சொத்திற்கு கிழக்கே தென்வடல் முனிசிபல் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்கே தென்வடல் ரோடு செல்கிறது என்றால் சரிதான். மேற்கு தென்வடல் ரோட்டிற்கும் தெற்குப் பார்த்து என் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தின் கிரைய ஆவணத்தில் தெற்கு மாலாக 20 அடி ரோடு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் அவரது முன்பாத்தியஸ்தர்களும் 1 லக்க சொத்தின் கிழக்குப் பக்கம் மற்றும் மேற்கு பக்கம் உள்ள தென்வடல் ரோடு வழியாகத் தான் போய் வந்தார்கள் என்றால் இல்லை. கிழக்குப் பக்கம் உள்ள ரோட்டினை மட்டும் தான் பயன் படுத்தி வந்தார்கள். அவர்கள் மேற்கு பக்கம் உள்ள நகராட்சி சாலையைத் தான் பயன்படுத்தி வந்தார்கள் என்றால் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. TS.No.67 ல் செல்லக்கூடிய பாதை நகராட்சி பாதை ஆகும் என்றாலும் அதை யாரும் தடுக்கமுடியாது என்றாலும் சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை பார்வையிடும் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். எங்கள் வீட்டிற்கு கிழக்கு பார்த்து D&R என்ற முத்திரையுடன் இருப்பு கேட் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் பிராது 1 லக்க சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள தென்வடல் நகராட்சி பாதையில் மேற்கு ஓரமாக கிழக்குப் பார்த்து D&R என்ற முத்திரையுடன் இரும்பு கிரில் கேட் அமைந்திருந்த RCC வீட்டின் முன்வாசல் பகுதியின் தரைப்பகுதியில் 8 சதுரடி பரப்பில் புல எண்.67 ஆன நகராட்சி தென்வடல் பாதையை ஆக்கிரமித்துள்ளதாகவும் முதல் தள பகுதியானது புல எண்.67 ஆன நகராட்சி தென்வடல் பாதையின் 61–1/2 சதுரடி பரப்பில் ஆக்கிரமித்துள்ளதாகவும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றாலும் அது தவறாகும். எனக்கும், வாதிக்கும் என்ன

பிரச்சனை என்றால் வாதி மேற்குப் பக்கம் நடை வைக்கக்கூடாது என்பது தான் பிரச்சனை ஆகும். வாதி வீட்டிற்கு கிழக்குப் பக்கமும், மேற்கு பக்கமும் நகராட்சி பாதை உள்ளது அதை தடுப்பதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் பிராது 1 லக்க சொத்திற்கு மேற்குப் பக்கம் வடக்கு கடைசியில் கிழமேல் 1 அடி அகலத்திலும், தென்வடல் 10 அடி நீளத்திலும் ஆக்கிரமித்து ரெடிமேட் காம்பவுண்ட் சுவர் என்னால் அமைக்கப்பட்டுள்ளதென குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

ஒம்/– சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.